ET/SSS/2022(2023)/OL/62/T/Q/S-4

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | க.பொ.த. சாதாரண தரம் | 2022 (2023)

# Student Seminar Series

## மாணவர் கருத்தரங்கு தொடர்

Practice Paper - முன்னோடி வினாப்பத்திரம்

# History

# வரலாறு



**Question Paper - I, II** | வினாப்பத்திரம் - I, II (மொழிமூலம்-தமிழ்)

Nenasa

The National e-learning Portal for The General Education

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 33 | T | I |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர்- 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)

ඉතිහාසය I
வரலாறு I
History I

ஒரு மணித்தியாலம்

## வரலாறு I

கவனிக்க

- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. இலங்கையின் மிகப் பழைமையான உள்நாட்டு இலக்கிய மூலாதாரமான தீபவம்சத்தில் காணப்படும் குறைபாடு யாது?
   (1) மகாசேன மன்னனின் ஆட்சிக்கால முடிவு வரையிலான தகவல்கள் மாத்திரம் உள்ளடங்கியுள்ளமை
   (2) வரலாற்றுத் தகவல்கள், பௌத்த சாசனம் பற்றிய தகவல்கள் மாத்திரம் உள்ளடங்கியுள்ளமை
   (3) தகவல்கள் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், சில விடயங்கள் உள்ளடக்கப்படாமை
   (4) சில பாகங்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ளமை

2. கம்பளை முதல் கோட்டை வரையிலான அரசியல் தகவல்கள் உள்ளடங்கியுள்ள இலக்கிய மூலாதாரம்
   (1) நிகாய சங்கிரஹய (2) பூஜாவலிய
   (3) சத்தர்மலங்காரய (4) ராஜாவலிய

3. இந்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழைமையான நாணயம்
   (1) கஹபண (2) யானை மற்றும் சுவஸ்திகா
   (3) லக்ஷ்மி நாணயம் (4) தம்பமஸ்ஸ

4. நில மட்டத்திலிருந்து 45 அடி ஆழத்தில் காணப்படும் இரணைமடுப் படிவுக்குரிய சரளைக்கற் படிவில் கற்காலத்திற்குரிய ஆதாரங்கள் கிடைத்துள்ள இடம்
   (1) பூந்தல வெல்லே கங்கொட (2) பதிராஜவெல .
   (3) உடமல்ல (4) மினிஹாகல்கந்த

5. இலங்கைக்கு வருகை தராது இலங்கை பற்றி எழுதிய உரோம எழுத்தாளரையும், அவரது ஆக்கத்தையும் உள்ளடக்கிய விடையாக அமைவது
   (1) அரிஸ்டோட்டில் - டிமுண்டோ.
   (2) பிளினி - நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா.
   (3) மெகஸ்தனிஸ் - இண்டிகா.
   (4) பர்னாவோ டி குவேரோஸ் - இலங்கை பற்றிய தேச சஞ்சார அறிக்கை

6. கீழே A தொடக்கம் D வரையான விடயங்களுள் கற்கால மனிதனின் மரணச் சடங்கு முறைகளை மாத்திரம் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.

A. இரண்டாகப் பிளக்கும் வகையில் துளையிடப்பட்ட மண்டையோடு.
B. மனித உடலை எரித்துப் பெறப்பட்ட சாம்பலை மட்பாத்திரத்தினுள் இட்டு புதைத்தல்.
C. அஸ்தி வைக்கப்பட்ட சிறிய மட்பாத்திரங்களை பெரிய மட்பாத்திரமொன்றினுள் இட்டுப் பாதுகாத்தல்.
D. எலும்புக்கூடு வளைத்துப் புதைக்கப்பட்டமை.

(1) A யும் C (2) B யும் C (3) B யும் D (4) A யும் D

7. ஆரம்ப வரலாற்றுக் கால பிராமிக் கல்வெட்டுக்களில் **“புரகமத்த”** எனும் சொல்லால் குறிப்பிடப்படுவது
(1) கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையில் அமைந்துள்ள குடியிருப்பு
(2) நகரத்தின் பிரதான கட்டடக் கலைஞர்.
(3) பத்துக் கிராமத் தலைவர்களைக் கொண்ட சபை.
(4) குடும்பத்தை பிரதிநிதித்துவப்படுத்திய குர்ஹபதி

8. ஆரம்ப வரலாற்றுக் கால மக்கள் ஆற்றுப் பள்ளத்தாக்குகளுக்கு அப்பால் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டமைக்கான பிரதான காரணம்
(1) அப்பிரதேசங்களின் மண் விவசாயத்திற்கு மிகவும் பொருத்தமாகக் காணப்பட்டமை.
(2) சேனைப் பயிர்ச் செய்கை பிரதான விவசாய முறையாக காணப்பட்டமை
(3) வெள்ளப் பெருக்கினை கட்டுப்படுத்துவது தொடர்பான அறிவின்மை.
(4) வீடுகளைக் அமைப்பதற்கு அப்பிரதேசம் மிகவும் பொருத்தமாக இருந்தமை.

9. புராதன காலத்தில் இல்லத் தலைவர்களிலிருந்தே கமிக தெரிவு செய்யப்பட்டார் எனக் குறிப்பிடும் நூல்
(1) ஜாதக அட்டகதா. (2) சத்தர்மலங்காரய.
(3) சத்தர்மரத்னாவலிய. (4) சமந்தபாசதிகாவ

10. முதன் முறையாக நாட்டை பல நிர்வாக அலகுகளாகப் பிரித்து, அவற்றை நிர்வகிப்பதற்கு அமைச்சர்களை நியமித்த மன்னன்.
(1) வசப மன்னன் (2) பண்டுகாபயன்.
(3) துட்டகைமுனு மன்னன். (4) பாதிகாபய மன்னன்

11. பண்டைய சமூகத்தின் நிர்வாக அமைப்பில் எக்தன் சமிய எனும் பதம் குறிப்பிடுவது.
(1) சட்டத்துறை, பொதுத்துறை
(2) சட்டத்துறை, நிர்வாகத்துறை
(3) நிறைவேற்றுத்துறை, நீதித்துறை.
(4) சட்டத்துறை, நீதித்துறை.

12. பண்டை காலத்தில் எமது நாட்டின் ஆட்சியாளர்கள் வெளிநாடுகளுடன் நெருங்கிய வர்த்தகத் தொடர்புகளை பேணி வந்தமையை உறுதிப்படுத்தும் சான்றுகளைக் கொண்ட விடைத் தொகுதி
A. முதலாம் கஜபாகு மன்னன் இந்தியாவின் சேர இராச்சியத்துடன் தொடர்பு கொண்டிருந்தமை.
B. முதலாம் விஜயபாகு மன்னன் கலிங்க வம்சத்துடன் திருமணத் தொடர்பு வைத்திருந்தமை.
C. சிவப்புத் தீவு மன்னர்கள் இஸ்லாமிய அரசர்களுடன் பரிசில்களை பரிமாறிக் கொண்டமை
D. ஆறாம் அக்ரபோதி காலத்தில் சீன இராஜதந்திரிகள் இருபது முறை இலங்கைக்கு வருகை தந்தமை
E. பாதிகாபய மன்னன் உரோமாபுரிக்கு தூதுவர்களை அனுப்பியமை.

(1) A ,C ,D (2) B ,D ,E (3) C,D,E (4) A,C, D

13. தலைமைப் பிக்கு ஒருவரின் கீழ் வாழ்ந்த ஏனைய குருமார் பழைய கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதம்
(1) அந்தேவாசி (2) சதிவிகரிய
(3) பாணக (4) வசவசிக்க

14. இராசரட்டை நாகரிகத்திற்குரிய பாளி மொழியில் எழுதப்பட்ட இலக்கிய நூல்களைக் கொண்ட விடைத் தொகுதி
    (1) தீபவம்சம், அபிதனாபிரதீபிகா, சாராபிரதீபதி
    (2) ஜானகிஹரனய, பாலவதபோதன, சாராபிரதீபதி
    (3) சியபஸ்லகர, சசதாவத, பாலவதபோதன
    (4) தீபவம்சம், சசதாவக, முவதெவ்தாவ

15. வெளிப்புறம் செந்நிறமாகவும், உட்புறம் கருமையாகவும் காணப்பட்ட பண்டைய மட்பாண்டம் தயாரிக்கப்பட்ட விதம்.
    (1) வனைதற் சில்லு
    (2) சூளையினுள் மட்பாண்டங்கள் பலவற்றை அடுக்கி வைத்து சுடுதல்
    (3) பாத்திரத்தினுள் உமியை நிரப்பி தலைகீழாக கவிழ்த்து சுடுதல்.
    (4) பாத்திரத்தின் வெளிப்பகுதிக்கு ஒட்சிசன் கிடைக்கா வகையில் மூடி வைத்து சுடுதல்

16. பண்டைய காலத்தில் மடைக்கதவு மூலம் வெளியிடப்படும் நீரைக் கட்டுப்படுத்துவதற்கு கலிங்கல் தொட்டியினுள் அமைக்கப்பட்டிருந்த கோல் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதம்
    (1) ஈரக்கலிங்கல் (2) மொஹால்
    (3) தண்ணீர் விளக்கு (4) கலிங்கல்

17. சீகிரியா நீர்ப்பூங்காவின் வாய்க்கால் தொகுதி சுருள் வடிவில் அமைக்கப்பட்டதன் நோக்கம்
    (1) நீரை நீண்ட காலத்திற்கு கால்வாயினுள் தேக்கி வைத்தல்
    (2) நீரோட்டத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தல்
    (3) கால்வாயின் இரு பக்கங்களிலும் சேறு படிவதைக் குறைத்தல்
    (4) மேலிருந்து கீழாக நீரோட்டம் செல்லும் போது அதில் சேறும் வண்டலை இயற்கையான ஈர்ப்பு விசை மூலம் கீழ்ப் பகுதியில் படியச் செய்தல்.

18. இரத்தினபுரி மாவட்டத்தில் கல்பாய பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள் சிதைவுகள் மூலம் அறியக் கிடைப்பது
    (1) அப்பிரதேசத்தில் மட்பாண்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளமை
    (2) பால்மடுயாகம், சாந்தி பூசைகள் இடம்பெற்றுள்ளமை
    (3) விவசாய நடவடிக்கைகளுக்கான சாந்தி பூசை இடம்பெற்றுள்ளமை
    (4) முன்வரலாற்றுக் கால மயானமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை

19. பாதிகாபய மன்னனால் அநுராதபுர பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரைக்கு ஒவ்வோரு கரிசை அளவில் நிலங்கள் வழங்கப்பட்டதாக குறிப்பிடும் கல்வெட்டு
    (1) கொத்கல்கந்த கல்வெட்டு. (2) நெட்டுகந்த கல்வெட்டு.
    (3) துனுமண்டலாகந்த கல்வெட்டு (4) வெஹெரகம கல்வெட்டு.

20. புராதன காலந் தொட்டு பெண் பிள்ளைகளுக்கு கல்வியறிவை வழங்குவது பெற்றோரின் கடமை எனக் குறிப்பிடும் நூல்
    (1) சத்தர்மலங்காரய (2) சகஸ்ஸவத்துப்பகரணய
    (3) சத்தர்மரத்னாவலிய (4) ரசவாஹினி

21. பண்டைய கால மக்கள் உட்கொண்ட உணவு வகைகள் ''அ'' நிரலிலும், அவற்றின் புராதன பெயர்கள் ''ஆ'' நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தும் போது வரும் சரியான விடை

| **“அ” நிரல்** | **“ஆ” நிரல்** |
|---|---|
| 1. நெய்யால் சுடப்பட்ட மயில் இறைச்சி | A. வாசனை திரவியங்கள் |
| 2. தானியங்களை வறுத்து தயாரிக்கப்பட்ட உணவு | B. செல்வந்தர்களின் உணவு |
| 3. உணவை சுவையூட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட பலசரக்கு | C. காடிப்புளிப்பு |
| 4. அரிசிமாவை புளிக்க வைத்து தயாரிக்கப்பட்ட உணவு | D. அத்சுனு |

(1) ABDC (2) ACBD (3) BACD (4) BDAC

22. பின்வரும் A தொடக்கம் D வரையான படைப்புக்களில் தென்கிழக்கு ஆசியாவின் கட்டடக் கலை மரபினைக் கொண்ட விடைத் தொகுதி
   A. மகாமேகவன சமாதி புத்தர் சிலை
   B. பொலன்னறுவை சத்மஹல் பிரசாதய
   C. அவுக்கண புத்தர் சிலை
   D. கல்விஹாரை புத்தர் சிலை.

   (1) A C  (2) B C  (3) B D  (4) C D

23. யாழ்ப்பாண இராசதானியை ஆட்சி செய்த ஆரிய சக்கரவர்த்தி பரம்பரையைச் சேர்ந்த ஆட்சியாளர்கள் பன்னிருவர் பற்றி குறிப்பிடும் நூல்
   (1) செகராசசேகரமாலை  (2) யாழ்ப்பாண வைபவமாலை
   (3) பத்துப்பாட்டு  (4) சிலப்பதிகாரம்.

24. கண்டி இராசதானி காலத்தில் பிரதேச நிர்வாகம் பிரிக்கப்பட்டிருந்த இரண்டு பிரதான பகுதிகளும் யாவை?
   (1) ரட்ட மற்றும் திசாவை  (2) ரட்ட மற்றும் கோறளை
   (3) திசாவை மற்றும் கோறளை  (4) கோறளை மற்றும் பற்று

25. ஐரோப்பிய வரலாற்றில் மத்திய காலமாக கருதப்படுவது
   (1) கிரேக்க, உரோம நாகரிகம் நிலவிய காலம்.
   (2) உரோம நாகரிகத்தின் வீழ்ச்சியின் பின்னரான ஆயிரம் வருடங்கள்
   (3) அபோஜின்கள் பலம் பெற்றிருந்த காலம்
   (4) மினோவன் நாகரிகம் ஐரோப்பாவில் பரவியிருந்த காலம்.

26. கி.பி 1638 இல் மட்டக்களப்பில் இருந்த போர்த்துக்கேயரின் கோட்டையைத் தாக்குவதற்கு இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கு உதவிய ஒல்லாந்த தளபதி யார்?
   (1) பரன் வன் எக்  (2) விலம் பல்க்  (3) பன்ஹூன்ஸ்  (4) வெஸ்டவோல்ட்

27. கைத்தொழிற் புரட்சியின் காரணமாக முதலாளித்துவ பொருளாதார முறைமை வேகமாக வளர்ச்சியடைந்தது. அதன் மூலம் முதலீட்டுத் துறையில் ஏற்பட்ட புதிய மாற்றம்.
   (1) சம்பளத்திற்காக வேலை செய்யும் தொழிலாளர் வர்க்கம் ஒன்று உருவானமை
   (2) வேலை நிறுத்தப் போராட்டங்களும், தொழிலாளர் உரிமைப் போராட்டங்களும் ஏற்பட்டமை.
   (3) கூட்டு வர்த்தக கம்பனிகளும், பல்தேசிய கம்பனிகளும் உருவாகியமை.
   (4) வகுப்பு ரீதியான சமூகம் உருவாகியமை

28. ஆங்கிலேயரின் ஆதிக்கம் பலப்படுவதை தடுப்பதற்காக கி.பி 1623 ஆம் ஆண்டு ஒல்லாந்தரின் தாக்குதலுக்குள்ளான கோட்டை
   (1) அம்பொய்னா தீவு  (2) ஜாவாத் தீவு
   (3) சுமாத்திரா தீவு  (4) பிலிப்பைன்ஸ் தீவு

29. சென்னை ஆட்சி முறையின் கீழ் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் வரி வசூலிப்பதற்காக நியமிக்கப்பட்ட உதவிப் பரிசோதகர்கள் எப்பெயரில் அழைக்கப்பட்டனர்
   (1) அவுமில்தார்  (2) ரெசிடன்ட்
   (3) கொமாண்டர்.  (4) கலெக்டர்

- இலங்கையின் சமய மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய பின்வரும் விடயங்களைக் கொண்டு 30-32 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

| | | |
|---|---|---|
| A . அநகாரிக தர்மபால | D. உதய பானு | G. மத்ரஸா பாடசாலை |
| B. ஆறுமுக நாவலர் | E. முஸ்லிம் நேசன் | H. கம்பளை ஜினராஜ வித்தியாலயம் |
| C. சித்தி லெப்பை | F . மகாபோதி சஞ்சிகை | I. சைவ ஆங்கிலப் பாடசாலை |

30. பௌத்த சமய மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய விடையாக அமைவது

(1) A,E ,I (2) A, F,G (3) A, F,H (4) A, D, I

31. இஸ்லாமிய சமய மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய விடையாக அமைவது

(1) B,E ,G (2) C,E ,G (3) B, E,I (4) C,E ,I

32. இந்து சமய மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய விடையாக அமைவது

(1) B, E,I (2) C,D, I (3) B, E, H (4) B, D, I

33. இடதுசாரித் தலைவர்கள் தமது சுதந்திரப் போராட்ட பிரசாரத்தினை மேற்கொள்ள பயன்படுத்திய இயக்கம்

(1) சூரியமல் இயக்கம் (2) பொபிமலர் இயக்கம்
(3) தேசிய இயக்கம் (4) சமய மறுமலர்ச்சி இயக்கம்

34. எமது நாடு பிரித்தானியரின் குடியேற்றமாக இருந்தமையின் விளைவாக கிடைத்த நன்மைகளுள் ஒன்று அல்லாதது

(1) ஆங்கில மொழி அறிவு பரவலடைந்தமை
(2) பாராளுமன்ற ஆட்சிமுறை அறிமுகம்
(3) மேலைத்தேய கலாசாரப் பரவல்.
(4) கைத்தொழிற் புரட்சியின் செல்வாக்கு கிடைக்கப் பெற்றமை

- கீழே A, B, C D மூலம் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிகளைப் பயன்படுத்தி 35-38 வரையான வினாக்களுக்கு விடை தருக?

A - 1. பெருந்தோட்டச் செய்கை ஆரம்பம்
2. காணியற்ற மக்கள் கூட்டம் உருவாக்கம்

B - 1. அமெரிக்கா சுதந்திரப் போர்
2. பஸ்டில் சிறைச்சாலைத் தாக்குதல்

C - 1. இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழில்
2. ஏக்கல கைத்தொழில் பேட்டை

D - 1. சர்வதேச சங்கம்
2. இரண்டாம் உலக மகாயுத்தம்

35. முதலாவதன் வெற்றிக்கு இரண்டாவது காரணமான சோடி.

(1) A (2) B (3) C (4) D

36. இரண்டாவதன் ஆரம்பத்திற்கு முதலாவது காரணமான சோடி

(1) A (2) B (3) C (4) D

37. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் எவ்விதத் தொடர்புமற்ற சோடி.,

(1) A (2) B (3) C (4) D

38. முதலாவதன் வீழ்ச்சி இரண்டாவது ஆரம்பமாவதற்கு காரணமான சோடி,
(1) A (2) B (3) C (4) D

39. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் முதலாளித்துவ, சமவுடைமைவாத முகாமில் இணையாது சுயாதீனமாக செயற்பட்ட அமைப்பு

(1) நேட்டோ அமைப்பு (2) வோர்சோ அமைப்பு
(3) ஐக்கிய நாடுகள் சபை (4) அணிசேரா நாடுகள் இயக்கம்.

40. கீழே குறிப்பிடப்பட்டுள்ளனவற்றுள் ஐக்கிய நாடுகள் சபை தொடர்பில் பொருத்தமற்ற கூற்று
(1) சுவீடன் மற்றும் பின்லாந்துக்கிடையிலான மோதலை தீர்த்தல்
(2) சுயெஸ் கால்வாய் நெருக்கடியைத் தீர்த்து வைத்தல்
(3) ஈராக் மற்றும் குவைத் இடையில் ஏற்படவிருந்த யுத்தத்தை தடுத்து நிறுத்தியமை
(4) கியூபா ஏவுகணை நெருக்கடியை தீர்த்து வைத்தல்.

*****

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 33 | T | II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**வரலாறு II** **நேரம்: 3 மணித்தியாலம்**

- பகுதி – I இல் முதலாம் வினா கட்டாயமானது
- பகுதி – II இல் நான்கு வினாக்களுக்கும், பகுதி III இல் ஒரு வினாவிற்கும் விடையளிக்குக
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடையளிக்குக.

## பகுதி I

1. (அ)

i. கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
**நாகதீப, யான் ஓயா, இரணைமடு நீர்த்தேக்கம், கலாவாவி, கற்பிட்டி, மினிப்பே கால்வாய், மட்டக்களப்பு, ஜஜ்ஜர நதி, கொடவாய, காஜரகாம, பாகியன்கல, கன்னொறுவ**, (12 புள்ளிகள்)

ii. கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
**லிஸ்பன், உரோம், கருங்கடல், கோவா, கல்கத்தா, தாய்வான், கொரிய தீபகற்பம்** (6 புள்ளிகள்)

(ஆ)

i. கீழே ABCD என தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உமது விடைத்தாளில் எழுதுக.

A. பொலன்னறுவை இராசதானியின் ஆரம்ப ஆட்சியாளன்.
B. பிக்குமார் வசிப்பதற்கு இலை, இலுக்குப் புல் ஆகியவற்றால் வேயப்பட்டு மண்ணால் சுவரெழுப்பப்பட்ட கட்டிடம்.
C. பெரிய மட்பாண்டங்கள் பலவற்றை கிணற்றுக்குள் புதைத்து கிணற்றின் சுவரை மூடி அமைக்கப்பட்ட கிணறுகள்.
D. முதன் முறையாக ஸ்ரீ ஜயவர்தனபுரவில் பலம் வாய்ந்த கோட்டை ஒன்றை நிறுவியவன்.

(4 புள்ளிகள்)

- கீழே A, B எனத் தரப்பட்டுள்ள படங்களை அடிப்படையாகக் கொண்டு வினவப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை ஒழுங்கு முறைப்படி உமது விடைத்தாளில் எழுதுக

ii.
1. இவ்வுருவினால் காட்டப்படுவது யாது?
2. இவை கண்டுபிடிக்கப்பட்ட இடம் யாது?
3. இவை எவ்வூடகத்தால் ஆக்கப்பட்டுள்ளன?
4. இவை எத்தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டது?

(4 புள்ளிகள்)



A

1. இப்படத்தில் காணப்படும் நபர் யார்?
2. இவர் எந்நாட்டின் ஆட்சியாளர் ஆவார்?
3. இவர் எவ்வரச வம்சத்தைச் சேர்ந்தவர்?
4. இவ்வாட்சியாளன் வாழ்ந்த சுகபோக மாளிகை எது?

(4 புள்ளிகள்)

B



## பகுதி - II

2.

i. இலங்கையின் முன்வரலாற்றுக் கால
   A. களிமண் ஓடக் கல்லறை மயானங்கள் காணப்படும் இடங்கள் இரண்டினையும்
   B. அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானங்கள் (ஷீலா மஞ்சுசா) காணப்படும் இடமொன்றினையும் குறிப்பிடுக (3 புள்ளிகள்)

ii. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியிருப்புக்கள் பரவலடைவதில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

iii. முன்வரலாற்றுக்கால மனிதனின் தொழினுட்ப வளர்ச்சியினை உடரஞ்சாமடம வீட்டிலிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களைக் கொண்டு இரு காரணிகளினூடாக விளக்குக (5 புள்ளிகள்)

iv. கீழே தரப்பட்டுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆரம்ப வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் பண்புகளை சுருக்கமாக விளக்குக
   A. கிராமம்
   B. நகரம்
   C. புரம் (6 புள்ளிகள்)

3.

i. கீழே ABC என தரப்பட்டுள்ள தகவல்களுக்குரிய விடைகளை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக
   A. மகாவம்சத்தின் விளக்க உரையாக எழுதப்பட்ட உரைநூல்
   B. கம்பளை இராசதானி காலத்தில் இந்நாட்டுக்கு வருகை தந்த அரேபிய தேசசஞ்சாரி
   C. கற்குகைகளின் பீலிகளுக்கருகில் செதுக்கப்பட்டவை
   **(குன்றுக் கல்வெட்டு, இப்ன் பதூதா, வினய அட்டகதா, மகாவம்சம், சுலைமான், குகைக் கல்வெட்டு, வம்சத்தப்பகாசினி)** (3 புள்ளிகள்)

ii. வரலாற்றைக் கட்டியெழுப்புகையில் இலக்கிய மூலாதாரங்களைப் பயன்படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

iii. வரலாற்றைக் கற்பதற்காக தொல்பொருள் மூலாதாரங்களைப் பயன்படுத்துவதனால் கிடைக்கும் பயன்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. தொல்பொருள் மூலாதாரங்களை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை மூன்று காரணிகளினூடாக விளக்குக (6 புள்ளிகள்)

4.

i. அரசியல் அதிகாரம் மத்தியமயப்படுத்தப்படும் செயற்பாட்டின் போது நாட்டின் பிரதான ஆட்சியாளனால் ஆற்றப்பட வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கும் பணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. பண்டைய மக்கள் குளத்தொகுதியொன்றை உருவாக்கியதன் மூலம் நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்த்த நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. இந்நாட்டின் அதிகாரத்தை மத்தியமயப்படுத்தலில் தேவநம்பிய தீஸன் மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (5 புள்ளிகள்)

iv. சோழராட்சியிலிருந்து விடுவித்து நாட்டை மீண்டும் ஐக்கியப்படுத்துவதற்காக முதலாம் விஜயபாகு மன்னன் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (6 புள்ளிகள்)

5.

i. வசப மன்னனால் அம்பன் கங்கையை மறித்து கட்டப்பட்ட எலஹர கால்வாயின் மூலம் நீரைப் பெற்றுக் கொள்ளும் குளங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. கீழே A-D வரை தரப்பட்டுள்ள விடயங்களுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

A. கற்பாறைகளிலிருந்து கற்பாளங்களைப் பிரித்தெடுக்கும் கல்லாயுதம் சார்ந்த தொழினுட்பம்

B. புராதன காலத்தில் கால்வாய் நிர்மாணிப்புடன் தொடர்புடைய நபர்கள் அழைக்கப்பட்ட விதம்

C. நிலத்தை அளப்பதற்காக பயன்படுத்தப்பட்ட மிகச் சிறிய அலகு

D. ஒரு நெல்மணியளவிலான தங்க நகையில் 21 பூக்கள் செதுக்கப்பட்டிருந்தமை

**(அங்குலம், அடிக, ஜேதவனராம அகழ்வு, அமுக்கப் பிரயோகம், பரமாணு, வஜ்ரசும்பட்ட, அபயகிரி அகழ்வு)** (4 புள்ளிகள்)

iii. அரச அனுசரணையின் கீழ் பாரிய நீர்ப்பாசனத் தொகுதிகள் அமைக்கப்பட்டமையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

iv.

A. இரும்புருக்கு தொழினுட்பம் பற்றி ஆதாரங்கள் கிடைக்கப் பெற்ற இரு இடங்களைக் குறிப்பிடுக.

B. இவ்விடங்களில் இரும்பை உருக்குவதற்காக பயன்படுத்தப்பட்ட தொழினுட்ப முறைகளை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

6.

i. கண்டி இராசதானிக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் மூன்றினைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)

ii. கீழே A-D வரை தரப்பட்டுள்ள விடயங்களுக்கு பொருத்தமான விடையினை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக

A. சிங்கள அரச வம்சத்தின் இறுதி ஆட்சியாளன்

B. கண்ணுசாமி இளவரசனை ஆட்சியில் அமர்த்திய பிரதானி

C. பிரதானிகளின் கட்டளைகளை, செய்திகளை பிராந்திய அதிகாரிகளுக்கு கொண்டு சென்றவர்கள்

D. போர்த்துக்கேயரால் கண்டியில் தமக்கு சார்பான ஆட்சியாளனாக ஆட்சிபீடமேற்றப்பட்ட நபர்

**(ஜயவீர பண்டார, ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன், வீரசுந்தர பண்டார, யமசிங்க பண்டார, கடுபுள்ளே, பிலிமத்தலாவ, விதானைமார்)** (4 புள்ளிகள்)

iii. கண்டி இராச்சியம் தொடர்பாக ஒல்லாந்தரின் குறிக்கோளில் காணப்படும் சிறப்பியல்புகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக (5 புள்ளிகள்)

iv. சீதாவாக்கை இராசதானியின் எழுச்சிக்கு ஏதுவான காரணிகள் இரண்டினையும், வீழ்ச்சிக்கு ஏதுவான காரணி ஒன்றினையும் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (6 புள்ளிகள்)

7.

i. **17 ஆம்** நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் இந்தியாவில்

A. ஆங்கிலேயரால் நிறுவப்பட்ட வர்த்தக மத்திய நிலையங்கள் இரண்டினையும்

B. பிரான்சியரால் நிறுவப்பட்ட வர்த்தக மத்திய நிலையமொன்றினையும் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. 1803இல் ஆங்கிலேயரால் மேற்கொள்ளப்பட்ட கண்டி மீதான படையெடுப்பு தோல்வியடைந்தமைக்கு ஏதுவான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

iii. 1818 சுதந்திரப் போராட்டத்திற்கு ஏதுவான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (5 புள்ளிகள்)

iv. 1848 சுதந்திரப் போராட்டம் ஆரம்பமாவதற்கு கோல்புறூக்கின் சீர்த்திருத்தங்கள் ஏதுவாக அமைந்த விதத்தை மூன்று காரணிகளுடாக விளக்குக (6 புள்ளிகள்)

## பகுதி - iii

8.

i. மறுமலர்ச்சி காலத்தில் ஏற்பட்ட சிந்தனைப் புரட்சியுடன் கத்தோலிக்க திருச்சபையின் ஊழல்களை விமர்சனம் செய்த நபர்கள் மூவரைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

ii.

A. ஐரோப்பியர் கீழைத்தேசங்களுக்கு வருவதற்கான புதிய வர்த்தகப் பாதைகளை கண்டுபிடிக்கும முயற்சியில் ஈடுபட்டமைக்கு எதுவான காரணங்கள் இரண்டினையும்,

B. அதற்குத் துணையாக அமைந்த இரு கண்டுபிடிப்புகளையும் குறிப்பிடுக

(4 புள்ளிகள்)

iii. மறுமலர்ச்சியின் பின்னர் உலகமயமாதலின் நவீன போக்குகளை இரு காரணிகளினூடாக விளக்குக. (5 புள்ளிகள்)

iv. மறுமலர்ச்சியின் காரணமாக உலக அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

9.

i. பிரித்தானியர் தமது வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு அமெரிக்க குடியேற்றங்கள் மீது பிறப்பித்த வரிச் சட்டங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. முதலாம் உலக மகா யுத்தத்துடன் தொடர்புடைய

A. நட்பு நாடுகள் அணியைச் சேர்ந்த இரு நாடுகளையும்,

B. மத்திய ஐரோப்பிய வல்லரசு அணியைச் சேர்ந்த ஒரு நாட்டையும் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)


iii. பிரான்ஸிய புரட்சிக்கு ஏதுவான அரசியல் காரணிகள் இரண்டைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (5 புள்ளிகள்)

iv. இரண்டாம் உலக மகாயுத்தம் ஏற்படுவதில் ஜேர்மனியில் ஹிட்லரின் செயற்பாடுகள் நேரடியாக செல்வாக்கு செலுத்திய விதத்தினை மூன்று காரணிகளினூடாக விளக்குக

(6 புள்ளிகள்)

*****




N
Indian Ocean
Africa